இரட்சிப்பு

# ஜெபம்



- ❖ ஒரு மனிதன் தேவனிடத்தில் கருத்து பரிமாற்றம் செய்வது
- ❖ நமது மனதின் உணர்வுகளை அது இருக்கின்ற விதமாக தேவனிடம் சொல்வது
- ❖ தேவனிடம் எல்லாவற்றையும் குறித்து பேசலாம். குறிப்பாக உள்ளார்ந்த உணர்ச்சிகள், தோல்விகள், துன்பங்கள், தொல்லைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள், மனப்போராட்டங்கள் ஆகிய அனைத்தையும் பற்றி அவரிடம் கூறலாம்.

பிதாவை நோக்கி ஜெபி. அதாவது, ‘பிதாவே’ என தொடங்கி, முடிவில் ‘இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ஆமென்’ என கூறு.

- ❖ இரட்சிக்கப்பட்டவுடன் வசனத்தை கைக்கொள்ள ஆரம்பித்தவுடன் (உனக்கு கிடைத்த வேத வசன அறிவிற்கு கீழ்படிந்தால் போதுமானது)

- பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் இருதயத்தில் வாசம் பண்ணுகிறார். (யோவான் 14:23)
- உன் சரீரம் தேவனுடைய ஆலயம். (1 கொரிந்தியர் 3:16,17 & 6:19). எனவே அமைதியாக மனதிற்குள்ளும் ஜெபிக்கலாம். அல்லது தனியறையில் சத்தமாகவும் ஜெபிக்கலாம்.
- தனியறையில், கதவு பூட்டப்பட்ட அறையில் ஜெபிப்பது இடையூறு இல்லாமல், தொடர்ச்சியாக தேவனோடு பேச ஏற்ற நல்ல சூழ்நிலையாகும். (மத்தேயு 14:23, மாற்கு 1:35, லூக்கா 5:16, 6:12)

## ஜெபிக்க தேவனைக் குறித்த அறிவு அவசியம்

- ஜெபத்தை கேட்கிறவர் பதில் கொடுக்கிறவர்
- நமது நினைவுகளின் தோற்றங்களை அறிந்தவர். இருதயத்தின் சிந்தனைகளை அறிந்தவர்.
- அவசியமான தேவைகளை சந்திக்கிறவர்.
- நம்மை முழுமையாக பாதுகாக்கிறவர்
- நமது வாழ்வில் நடப்பதெல்லாம் நமது நன்மைக்கே
- தேவன் செய்வது எல்லாமே சரியாக இருக்கும். தேவன் தவறு செய்ய மாட்டார்.
- எது நடந்தாலும் தேவன் அன்பாகவே இருக்கிறார்
- எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய கரம் இருக்கிறது.
- தேவன் மாறாதவர். முடிவை துவக்கத்தில் அறிந்தவர்
- தேன் முந்தவும் மாட்டார், பிந்தவும் மாட்டார் சரியான நேரத்தில் செயல்படுவார்
- உங்களுக்கு துக்கத்தை கொடுக்கிறவர்களையும் தேவனால் கையாள முடியும்.

- ❖ எல்லா இருதயம் தேவனால் மாற்றம் பெறும்.
- ❖ காரியங்கள் மிகவும் மோசமாக சென்றாலும், தேவன் இறுதியில் பொறுப்பெடுத்து கொள்வார்.
- ❖ கர்த்தர் மறைந்திருந்து அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்
- ❖ கர்த்தர் தமக்கு சொந்தமாக தெரிந்து கொண்ட பிள்ளைகளுக்கு விரோதமாக, யாரும் தங்களுக்கு விருப்பமானபடி செய்ய முடியாது.
- ❖ உலகத்தை பாதிக்கும் தீர்மானங்களை எடுக்கும் தேவனற்ற அரசாங்கங்களிலேயும் தேவன் தலையிட முடியும்.

இயேசு கிறிஸ்துவோடு எல்லா நேரத்திலும் நீ பேசலாம். உனமது நண்பனோடு, சகோதரனோடு பேசுவது போல பேசலாம்.
ஏனெனில் நீ கிறிஸ்துவின் நண்பன். (யோவான் 15:15, எபேசியர் 1:4,5)
நீ கிறிஸ்துவின் சகோதரன் (எபிரேயர் 2:11, மத்தேயு 12:50, மாற்கு 3:35)

- ❖ நமது தேவை, போராட்டம் குறித்து ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினால் தேவனுக்கு நமது நிலையைத் தெரியப்படுத்த வேண்டும்.
- ❖ ஜெபத்திற்கு ஏற்ற நேரத்தில் தான் பதிலளிப்பார். ஆனால் உடனடியாக நமக்குத் தமது சமாதானத்தை அருளுவார். (பிலிப்பியர் 4:6,7)

ஜெபிக்க கற்றுக் கொள்ள சேர்ந்து ஜெபி